මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-011-2484500, (94)-011-2484600, (94)-011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: (94)-011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PFD/RED/REG/02/CC/2022
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.05.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தலைவர்கள்

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வருடாந்த செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் கணக்குகள்**

2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (2) பிரிவிற்கமைவாக, தாங்கள், கணக்காய்வாளர் நாயகத்திற்கு, வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கும்போது, வருடாந்த செயற்றிறன் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020.08.28ஆந் திகதியிடப்பட்ட பொதுநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020இன் 10ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தமது நிறுவனமும், தமக்குக் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களும், 2021.12.31ஆந் திகதியில் முடிடையும் நிதியாண்டிற்கான வருடாந்த கணக்குகளுடன், 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(2)இன் பிரகாரம், வருடாந்த செயற்றிறன் அறிக்கையையும், மேலேயுள்ள சுற்றறிக்கை விதிகளின்படி, பொதுக் கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட, பொதுக் கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/03இன் பிரகாரம் 2022.02.28ஆந் திகதிக்குள், கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்துள்ளன என உத்தேசிக்கின்றேன்.

02. மேலே பந்தி 01இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், தங்களது நிறுவனத்தினால், கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், தற்போது நாட்டில் நிலவும் நிலைமைகள் காரணமாக, பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020இன் 12ஆம் பந்தியின் விதிகளுக்கமைவாக, நிதியாண்டு முடிடைந்து 150 நாட்களுக்கு முன்பதாக, மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட, 2021ஆம் ஆண்டிற்கான செயற்றிறன் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முடியாமற்போயிருந்தால், அத்தகைய அரச நிறுவனங்களுக்கு, 2021ஆம் ஆண்டிற்கான செயற்றிறன் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் திகதியானது, 2022.06.30 வரை நீடிக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

**ஒப்பம் / கே.எம்.எம்.சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :
(1) ஜனாதிபதியின் செயலாளர்.
(2) பிரதமரின் செயலாளர்.
(3) அமைச்சரவைச் செயலாளர்.
(4) செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
(5) கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வாளர் அலுவலகம்.
(6) தலைவர், நிதி ஆணைக்குழு.